செய்தி வெளியீடு எண் : 2067 நாள் : 13.10.2023

**செய்தி வெளியீடு**

இன்று (13.10.2023) புதுதில்லியில் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 26 வது கூட்டம் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் திரு.எஸ்.கே.ஹல்தார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப. அவர்கள், காவேரி தொழில்நுட்ப குழு தலைவர் திரு.ஆர். சுப்பிரமணியம், உறுப்பினர் திரு.எல்.பட்டாபி ராமன், உதவி செயற்பொறியாளர் திருமதி ரம்யா மற்றும் கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய பிற மாநிலங்களில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சார்பாக பில்லிகுண்டுலிருந்து கர்நாடகா வினாடிக்கு 16,000 கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டுமென காவிரி மேலாண்மை ஆணையத்தில் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் வரும் அக்டோபர் 16-ம் தேதி முதல் 15 நாட்களுக்கு தமிழகத்திற்கு காவேரியில் வினாடிக்கு 3,000 கனஅடி நீர் திறக்க கர்நாடகாவிற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in